2011 ஆகஸ்ட் 30] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2011), 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2011) மற்றும் 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2011) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 6–10

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2011). மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை

[திரு. கே.பி. முனுசாமி] [2011 ஆகஸ்ட் 30

சட்டமுன்வடிவு எண் 16/2011)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை) (குறுக்கீடுகள்)

முதலில் அதனால்தான் நான் கொஞ்சம் நிறுத்தினேன். இச்சட்டமுன்வடிவின்மீது கருத்துகள் கூற விரும்பும் மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களது கருத்துகளைச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரக்கூடிய உள்ளாட்சித் தேர்தலில் ஜனநாயக முறைப்படி மக்களால் நேரடியாக நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய வகையில், இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இதை வரவேற்கிறோம். மேலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய இந்த ஜனநாயக முறையைத் தொடர்ந்து வலியுறுத்துகிறது. அதேபோன்று, மாவட்ட மற்றும் ஊராட்சி அமைப்புகளுக்கும் நேரடித் தேர்தல்களை வலியுறுத்தி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வலியுறுத்தப்படுகிற நேரடித் தேர்தல் என்ற வகையில், நகராட்சி, மாநகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் நேரடியாகத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிற முறையை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில்

@ 30—8—2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

வரவேற்கிறோம். அதைப்போல, ஊராட்சி ஒன்றியங்களிலும் அப்படிப்பட்ட தேர்தலைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். எங்களுடைய இன்னொரு அழுத்தமான கருத்து. நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை 50 விழுக்காடு எனக் கொண்டு வரவேண்டும். அதற்கானச் சட்டத் திருத்தத்தையும் இந்த அவையிலே கொண்டுவந்து, நடைபெறவிருக்கிற தேர்தலில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு 50 விழுக்காடு என நிர்ணயித்து, நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய இந்த முறையை, புதிய தமிழகம் கட்சியின் சார்பாக மனதார வரவேற்கிறேன். அதே சமயத்தில், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் பதவி என்பது மிகவும் முக்கியமானது. அதிலேயும் நேரடித் தேர்தல் நடத்தப்பட்டால்தான், உண்மையான கிராமப் பஞ்சாயத்துகள் வெற்றிகரமாக அமையும். அது மாநில அரசினுடைய அதிகாரத்திற்குட்பட்டு இல்லாவிட்டாலும்கூட, எவ்வளவு விரைவாக மத்திய அரசாங்கத்திடமிருந்து இதற்குண்டான திருத்தத்தைப் பெற்று, வரவிருக்கின்ற இந்த உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக, வாய்ப்பிருந்தால் அதையும் திருத்தி, ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் மாநகராட்சி, நகராட்சிகள், ஊராட்சி மன்றப் பெருந்தலைவர்கள் பதவிகளுக்கும் நேரடித் தேர்தலை நடத்திடவும், அதேபோல நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் சுழற்சி முறையில் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை அமலாக்கவும் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வலியுறுத்தி அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 30

*__திரு. பி.வி. கதிரவன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பிலே கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவின்மூலம், நகராட்சி, மாநகராட்சிகளுக்கான உறுப்பினர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்ற முறையை எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் வரவேற்கின்றது; பாராட்டுகிறது. அதேநேரத்தில், ஒன்றியங்களிலே நடைபெறுகின்ற ஒன்றியப் பெருந்தலைவர்கள் தேர்தல்களில், அவர்களையும் மக்களே தேர்ந்தெடுக்கின்ற முறையைக் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். இந்த முறைக்கு எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாகப் பாராட்டு தெரிவித்து, நிறைவு செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

*__திரு. ச. இராமச்சந்திரன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்திய சட்டமுன்வடிவுகளை, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பிலே முழுமனதுடன் வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமுன்வடிவின்மூலம், மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய உரிமையைப் பெறுகிறார்கள்.* Empowerment of the people *என்று சொல்வார்கள். மறைமுகமாக இருந்த ஜனநாயகத்தை நேர்முகமாக ஆக்கியிருப்பதற்காக என்னுடைய பாராட்டுக்கள். அதேநேரத்திலே, உள்ளாட்சி மன்றங்களிலே இது மிகப் பெரிய ஊழல் தடுப்பு நடவடிக்கையாகவும் இருக்கிறது. "திருமங்கலம் ஃபார்முலா" போன்ற ஃபார்முலாக்கள் இதிலே எடுபடாமல் போகும் என்பதனாலேயும், இதை நான் வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 6–15

உள்ளாட்சிமன்றத் தேர்தல்கள் விரைவில் நடைபெற இருக்கின்றன. அதுகுறித்து, ஓர் ஆலோசனை மட்டும் வழங்கலாம் எனக் கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பாலும் உள்ள வார்டுகள் இப்போது பொது வார்டுகளாகவும், இதர வகுப்பார், குறிப்பாக, மேல் வகுப்பார் நிறைந்துள்ள, ஒருசில தாழ்த்தப்பட்ட குடும்பங்களே உள்ள இடங்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கென ஒதுக்கப்பட்டும், இப்படி ஏறுமாறாக அரசியல் காரணங்களுக்காகவும்,

2011 ஆகஸ்ட் 30] [திரு. ச. இராமச்சந்திரன்]
ஆதாயங்களுக்காகவும் கடந்த ஆட்சிக் காலத்திலே, வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன.

பொதுத் தேர்தல்களிலே, சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் கையாளுகின்ற முறையைப்போல, மக்கள் தொகை, தாழ்த்தப்பட்ட மக்கள் தொகை விகிதாச்சார அடிப்படையிலேயும், அருகருகே, the contiguous areas என்று சொல்வார்கள். அருகருகே அந்த ஒதுக்கீடு வார்டுகள் வராமல், பரவலாக இருக்கின்ற வகையிலேயும், பார்த்துக்கொள்கின்ற வகையிலே, இந்தத் தேர்தலுக்கு முன்னால் இந்த வார்டுகள் ஒதுக்கீட்டு முறையைச் சரி செய்ய முடியுமா என்பதையும் அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், கடந்த 2006 ஆம் ஆண்டே அப்போது நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே இதுபோன்ற மறைமுகத் தேர்தல் இல்லாமல், அனைத்து உள்ளாட்சிகளுக்கும் நேரடியாகத் தேர்தல் நடத்தப்படும் என்பதை 2006–லேயே அறிவித்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், அன்று சொன்னதை இன்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதைச் செய்ததோடு மட்டுமல்லாமல், சொல்லாததையும், இந்த நாடு நல்ல முறையில் முன்னேற வேண்டுமென்பதற்காக நகரங்களை, மாநகராட்சிகளாக, அதுவும் குறிப்பாக, சென்னை மாநகராட்சியை Greater Chennai என்று மிகப் பெரிய அளவிலே, அதன் சுற்றுப்புறங்களிலே இருக்கின்ற அனைத்து நகரங்களையும் இணைத்து 200 வார்டுகளைக் கொண்ட பெரு நகரமாக உருவாக்கி தேர்தலைச் சந்திக்க இருக்கிறார்கள்.

இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்கூட சில கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள்.

அந்தக் கருத்துக்கள் ஏற்புடையதா, ஏற்புடையதாக இல்லையா என்பதைவிட, மிகப் பெரிய அளவிலே நடக்கக்கூடிய இந்தத் தேர்தலில், ஒருசில இடங்களில் இதுபோன்ற தவறுகள் இருப்பதற்குரிய வாய்ப்புகள் இருக்கும். அந்தத் துறையினுடைய அலுவலர்கள் எடுக்கின்ற நடவடிக்கையின் காரணமாகவோ அல்லது சில சூழ்நிலைகள், அங்கே இருக்கின்ற மற்ற கட்சிகளினுடைய, அங்கு இருக்கின்ற செல்வாக்கு உடையவர்கள் அந்த அதிகாரிகளை நிர்ப்பந்தப்படுத்தி சில இடங்களில் தவறுகள் நடந்து இருக்கும். ஆனால், அப்படிப்பட்ட இடங்கள் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டு, உரிய நடவடிக்கையை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே உறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களும், நம்முடைய கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்களும் உள்ளாட்சித் தேர்தலில் மாவட்ட, ஒன்றியத் தேர்தல்கூட நேரடியாக நடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசை அணுகி, அதனுடைய உத்தரவைப் பெற்று நடத்த வேண்டுமென்று டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது மாநில அரசுக்கு உள்ள அதிகாரம். மாநகராட்சி, நகராட்சித் தேர்தல்களை நேரடியாகக் கொண்டுவருவதற்கு மாநில அரசே, சட்டமன்றத்திலே ஒரு சட்டத்தை இயற்றி தேர்தலை நடத்திவிடலாம். ஆனால், உள்ளாட்சித் தேர்தல் என்று வருகின்றபோது ஒன்றியம், மாவட்டம் மற்றும் பஞ்சாயத்து என்று வருகின்றபோது, மத்திய அரசினுடைய அரசமைப்புச் சட்டத்திலே அதை amendment செய்திருக்கின்ற காரணத்தினால், மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இந்திய அரசமைப்புச் சட்டம் 243(C)–ன்படி அதற்கு நேரடியாகத் தேர்தல் நடத்த முடியாது. எனவே, காலம் கனிகின்ற நேரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதையும் நிறைவேற்றுவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்திலே கூறி இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 35 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 35 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 30

பிற்பகல் 6–20

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2011), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2011)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 30—8—2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.